செய்தி வெளியீடு எண் :30 நாள் : 26.03.2018

சென்னை தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவுச்சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட தேர்தல் திட்டத்தின்படி முதல் கட்டத்தில் நான்கு நிலைகளில் கூட்டுறவுச்சங்கங்களுக்கு நடைபெற்றுவரும் நிர்வாகக்குழு தேர்தல் முதல்நிலையில் 26.3.2018 இன்று பதிவாளர் கட்டுப்பாட்டிலுள்ள 37 கூட்டுறவுச்சங்கங்களுக்கும், செயற்பதிவாளரான பால்வளத்துறை ஆணையர் கட்டுப்பாட்டிலுள்ள 76 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச்சங்கத்திற்கும் இதர செயற்பதிவாளர்களான கைத்தறி மற்றும் துணிநூல், வீட்டுவசதித்துறை, வேளாண்மைத்துறை, மீன்வளத்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, தொழில் வணிகத்துறை மற்றும் கதர் மற்றும் கிராமத்தொழில்துறை கட்டுப்பாட்டிலுள்ள 37 கூட்டுறவு சங்கங்களுக்கும் சேர்த்து ஆக மொத்தம் 150 கூட்டுறவுச்சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று காலை 10.00 மணிக்கு தொடங்கி 5.00 மணிக்கு நிறைவடைந்துள்ளது.

நாளை (27.03.2018) காலை 11.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை வேட்புமனுக்கள் பரிசீலனை நடைபெறும். அன்று மாலை 5.00 மணிக்குச் செல்லத்தக்க வேட்புமனுக்களின் பட்டியல் வெளியிடப்படும். வேட்புமனுக்களைத் திரும்பப் பெறுவதற்குக் கடைசிநாள் 28.03.2018 ஆகும். போட்டியிருப்பின் 02.04.2018 அன்று காலை 8.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணிவரை தேர்தல் நடைபெறும்.

**(சிவ.முத்துக்குமாரசாமி)**
**இணைப்பதிவாளர் /**
**மாவட்ட தேர்தல் பார்வையாளர்,தேனி.**

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி**